<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

**ID.No.** : **13/2021** சாட்சியம் : **WW1**

**Name** : **Gnanasekar**

**Date** : **24.09.2024**

**Time** : **10.50 a.m to 11.30 a.m.**

<u>தொ.த.சா.**1** திரு.**Gnanasekar** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் எந்த நிறுவனத்திற்கு எதிராக வழக்கு போட்டு உள்ளேன் என்றால் பர்ஃபெக்ட் எலக்ட்ரிக் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் எதிராக போட்டுள்ளேன். அந்த நிறுவனமானது விடுதலை நகர் எஸ் கொளத்தூர் சென்னையில் உள்ளது. அது கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த இடைக்கால மனு எண் 11 /2014 பர்ஃபெக்ட் பெட்றோ இன்ஜினியரிங் சர்வீஸில் ஃபிட்டராக வேலைக்கு சேர்ந்தேன் என சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அந்த நிறுவனம் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பர்ஃபெக்ட் எலக்ட்ரிக் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திற்கு எதிராக தான் வழக்கு போட்டு உள்ளேன் அங்கு இருந்தபோதுதான் என்னை வேலையில் இருந்து நீக்கினார்கள்.நான் பர்ஃபெக்ட்டு பெற்றோர் இன்ஜினியரிங் சர்வீசில் வேலை பார்த்துவிட்டு பர்ஃபெக்ட் எலக்ட்ரிக் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் இரு கம்பெனின் உரிமையாளர்களும் ஒரே நபர் என்பதால் நான் பர்ஃபெக்ட் எலெக்ட்ரிக் எலக்ட்ரானிக்ஸ் எதிராக வழக்கு போட்டு உள்ளேன். நான் என்னுடைய கையொப்பத்தை தமிழிலும்

ஆங்கிலத்திலும் இரு மொழிகளிலும் போடுவேன். தொ.சா.ஆ 9 ல் என்னுடைய கையப்பத்தை ஆங்கிலத்தில் போட்டு உள்ளேன். அந்த அடையாள அட்டையானது பர்ஃபெக்ட் பெற்றோ இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் ஆல் வழங்கப்பட்டுள்ளது. பர்ஃபெக்ட் பெற்றோ இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் இன் விலாசமானது ஆலந்தூர் ரோடு சைதாப்பேட்டையில் உள்ளது. தொ.சா.ஆ 9 க்கும் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இரண்டு நிறுவனத்தின் உரிமையாளரும் ஒரே நபர் தான். தொ.சா.ஆ 10 ஆனது எந்த நிறுவனத்தால் கொடுக்கப்பட்டது என்றால் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது அந்த ஆவணத்தில் பர்ஃபெக்ட் என்ற பெயர் மட்டும் தான் கண்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் அசல் ஆவணத்தில் முழு பெயரும் உள்ளது. அந்த ஆவணத்தில் 4408, 17 வது தெரு விடுதலை நகர், எஸ் கொளத்தூர் சென்னை என உள்ளது. தொ.சா.ஆ 10 தில் உரிமையாளரின் கையொப்பம் எதுவும் இல்லை. வழங்கப்பட்ட தேதியும் அதில் இல்லை. தொ.சா.ஆ 11 ஆனது 07.11.2017 க்கான ரசீது ஆகும். அது பர்ஃபெக்ட் பெட்ரோ இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் ஆல் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தற்சமயம் செயல்பட்டு வருகிறதா என நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. பர்ஃபெக்ட் பெட்ரோ இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் எதிராக வழக்கு போடவில்லை என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். தொ.சா.ஆ 11 ஆவணத்திற்கும் இந்த வழக்கத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. தொ.சா.ஆ 12 ஆனது 12.07.2008 இல் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆவணமும் பர்ஃபெக்ட் பெட்ரோ இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். தொ.சா.ஆ 12 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல. தொ.சா.ஆ 13 ஊதிய சீட்டு விடுப்பு அட்டையாகும். பர்ஃபெக்ட் பெட்ரோ

இன்ஜினியரிங் சர்வீசஸ் லிமிடெட் வழங்கி உள்ளது என்றால் தெரியவில்லை. அந்த ஆவணத்தில் என் கையொப்பத்தை தமிழில் போட்டு உள்ளேன் என்றால் ஆமாம். தொ.சா.ஆ 13 ஆவணத்திற்கும் இந்த வழத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தொ.சா.ஆ 14 ஆனது ரெஜிஸ்டர் டின் நம்பரின் ஆவணம் ஆகும். அதில் இரண்டு தாள்கள் உள்ளன என்றால் ஆமாம். முதல் தாளில் பர்ஃபெக்ட் பெட்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் லிமிடெட் என கண்டுள்ளது என்றால் ஆமாம் அதில் பதிவு எண் 059404 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் பதிவு தேதியானது 02.04.2006 என கண்டுள்ளது என்றால் ஆமாம். அதில் விலாசமானது 36/3 நம்பர் 16 ஆலந்தூர் ரோடு சைதாப்பேட்டை சென்னை என கண்டுள்ளது என்றால் ஆமாம். அதில் இமெயில் ஐடியானது தங்கராஜ் 1967 அட் சி பி டாட் காம் என கண்டுள்ளது என்றால் ஆமாம். அதில் இயக்குனர்களின் பெயர் ஆசீர்வாதம் ஜான்சன் கிறிஸ்டோபர் மற்றும் ஜான் தன்ராஜ் சைமன் என கண்டுள்ளது என்றால் ஆமாம்.இந்த ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.இரண்டாம் தாளில் அந்த நிறுவனமானது 26 5 2018 அன்று பதிவு செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் ஆமாம். மேலும் அதன் விலாசம் 4408 சர்ச் ஸ்ட்ரீட் விடுதலை நகர் 5 கொளத்தூர், சென்னை என கண்டுள்ளது என்றால் ஆமாம் அதன் இயக்குனர்களாக ஆசீர்வாதம், ஜான்சன், கிரிஸ்டபர் மற்றும் ராஜா சுந்தரம் லதா அருள் என கண்டுள்ளது என்றால் ஆமாம். இரண்டாம் தாள் மட்டும் தான் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் தவறு. மே 2015ல் தான் எதிர்மனுதார நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கும் காரணத்தினால் நான் அதற்கு முன்னர் வேலை செய்த நிறுவனம் இந்த நிறுவனத்தை கட்டுப்படுத்தாது என்றால் இரு நிறுவனத்தின் உரிமையாளர்களும் ஒரே நபர் தான். நான் தாக்கல் செய்திருக்கும்

ஆவணங்களுக்கும் வழக்கு இருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரி அல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றான் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd/.S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:24.09.2024